# மெட்ரோ ரயிலுக்கு ரூ.2,681 கோடி ஒதுக்கீடு

சென்னை மெட்ரோ ரயில் திட்டத்திற்கு, தமிழக பட்ஜெட்டில், 2,681 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

- மெட்ரோ ரயில் முதல் திட்டத்தில், 45.01 கி.மீ., முழு வழித்தடமும், இம்மாதம் செயல்பாட்டுக்கு வர உள்ளது. வண்ணாரப்பேட்டை முதல் திருவொற்றியூர் விம்கோ நகர் வரையிலான, 9 கி.மீ., நீட்டிப்பு திட்டம், 2020 ஜூனில் பயன்பாட்டுக்கு வரும்
- மீனம்பாக்கம் விமான நிலையத்தில் இருந்து, கிளாம்பாக்கம் வரை, மெட்ரோ பேருந்து பணிமனை வரை, மெட்ரோ ரயில் திட்ட வழித்தடம் நீட்டிப்பதற்கான சாத்தியக்கூறுகள், ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன

### இரண்டாவது திட்டம்

- சென்னை மெட்ரோ ரயில்இரண்டாவதுதிட்டத்தில், மூன்று வழித்தடங்களில், 118.90 கி.மீ., மெட்ரோ ரயில் பாதை அமைக்கப்பட உள்ளது
- முதற் கட்டமாக, மாதவரத்தில் இருந்து, சோழிங்கநல்லூர்; மாதவரத்தில் இருந்து, கோயம்பேடு பேருந்து நிலையம் வரையிலான, 52.01 கி.மீ., திட்டத்தை செயல்படுத்த, ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை, 20 ஆயிரத்து, 196 கோடி ரூபாய் நிதி வழங்க ஒப்புதல் அளித்துள்ளது



- இத்திட்டத்துக்கு, 40 ஆயிரத்து, 941 கோடி ரூபாய், மொத்த மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ள, மாநில அரசு, நிர்வாக அனுமதி அளித்து உள்ளது.

இத்திட்டத்துக்கு, இவ்வாண்டு நிதி நிலை அறிக்கையில், 2,681 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. பணிகள் விரைவில் துவக்கப்படும்.